திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே கடந்த காலத்தில் மின் கட்டணம்செலுத்தப்படாமல் பாக்கிகள் பல ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் தெரிகிறது. அந்த பாக்கிகளைக் கட்டாததன் காரணமாக விதிக்கப்பட்ட அபராத வட்டியை முதலமைச்சர் அவர்கள் நீக்கிவிட்டதாகத் தகவல் அனுப்பியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால்கூட முழுத் தொகையையும் உடனடியாகக் கட்ட வேண்டும் என்ற நிபந்தனை இருப்பதால் கட்ட முடியாத நிலை இருக்கிறது. எனவே, அபராத வட்டியைத் தள்ளிவிட்டு, அந்த பாக்கித் தொகையைக்கூட தவணையில் கட்ட அனுமதிக்கப் படுமா ? பல இடங்களில் மின் சப்ளை துண்டிக்கப்படுவதை நிறுத்தி, பாக்கித் தொகையைத் தவணை முறையில் கட்ட அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். அண்ணாநம்பி : தலைவரவர்களே, அன்று எம். ஜி. ஆர். அவர்களுடைய காலத்தில் விவசாயிகள் பாதிக்கப்பட்டதால் ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் என்று குறைந்த கட்டணம் அறிவித்தார்கள். இன்றைக்கு விவசாயிகள் கடுமையான பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந் நிலையில் ஓராண்டிற்காகிலும் இலவச மின்சாரம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) செய்தித் துறை துணை இயக்குநர் ஒருவர் அரசு அலுவலர் ஒழுங்குமுறை விதிகளை மீறிச் செயல்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : ஒரு சிறிய இடையீடு. என்னிடத்தில் இசைவு பெற்றுச் சில செய்திகளைப் பேச வேண்டுமென்று மூன்று, நான்கு பேர் இசைவு பெற்றிருக்கிறார்கள். முதலில், திரு. பி.எச். பாண்டியன்.

1989 ஏப்ரல் 4]

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசாங்க அலுவலர்கள் ஏதாவது குற்றச் சாட்டுக்கு ஆளானால், அரசாங்க அலுவலர்கள் மீது ஏதாவது வழக்கு போட்டாலும் கூட கவர்ன்மென்ட் சர்வன்ட்ஸ் கான்டக்ட் ரூல்ஸ்களின்படி அரசாங்கம் சஸ்பெண்ட் செய்வது வழக்கம். ஆனால் நான் பத்திரிக்கை வாயிலாகத் தெரிந்து கொண்ட ஒரு விவகாரம் இந்த அவையிலே பேசப்பட்ட விவகாரம். செய்தித் துறை துணை இயக்குநர் ஒருவர் போலீசாரால் வழக்குத் தொடரப்பட்டும், கவர்ன்மெண்ட் காண்டக்ட் ரூல்ஸ்படி சஸ்பென்ட் செய்யப்படவில்லையே; அதற்கு என்ன காரணம் என்பதை அரசாங்கத்தின் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இது ஒன்று. இரண்டாவது, இங்கே முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். இது ஜனநாயக இடம். ஆனால் அதே அதிகாரி பத்திரிகைக்கு ஒரு பேட்டி கொடுத்து, முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்வது எந்த விதியின் கீழ் என்று எனக்குத் தெரியவில்லை. கவர்ன்மென்ட் கான்டக்ட் ரூல்ஸ் அதற்கு இடம் கொடுக்கிறதா? இதை இப்படியே அனுமதித்தால் நம்முடைய அரசாங்கத்தில் ஒழுங்கு நடவடிக்கையே இருக்காது; ஒழுங்காக நிர்வாகம் நடைபெறாது என்ற காரணத்தால், இதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை அரசாங்கத்தின் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பி.எச். பாண்டியன் அவர்கள் குறிப்பிட்ட அந்த அதிகாரி மீது கடந்த காலத்திலேயே குடியரசுத் தலைவர் ஆட்சியில் பல புகார்கள் கூறப்பட்டு, அதுபற்றி கவர்னர் அவர்கள் விசாரணை நடத்தச் சொல்லி, அவர் எந்தக் கட்சியினுடைய தலைவர் குடும்பத்து நண்பராக இருக்கிறாரோ அல்லது அரசியல் ஆலோசகராக இருக்கிறாரோ—அது பிரச்சினைக்குரிய ஒன்றாக இருந்தாலும் கூட—அப்படிப்பட்டவர் மீது எழுப்பப்பட்ட புகார்கள் அண்ணா தி.மு.க. ஏடுகளிலேயே வெளிவந்ததையொட்டி கவர்னர் நடவடிக்கை எடுக்கச் சொல்லி, அதுபற்றிய அறிக்கைகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு வந்த பிறகு, கவர்னர் ஆட்சியில், அந்த அதிகாரியே ராஜினாமா செய்ய முன்வந்த போது, அந்த ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்படவில்லை. காரணம், ஏறத்தாழ $1\frac{1}{2}$ லட்ச ரூபாய்க்கு மேல் அவர் அரசாங்கத்திற்கு தரவேண்டியிருந்த காரணத்தால் ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்படாமல், அவர் மீது மேல் நடவடிக்கை எடுப்பதற்காக குறிப்பு வைக்கப்பட்டது. இப்போது நடைபெறுகின்ற செய்திகளைப்பற்றி திரு பாண்டியன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். உடனடியாக நடவடிக்கை எடுத்தால், ஏதோ பழி வாங்கி விட்டார்கள் என்று யாரும் கூறுவார்கள் என்பதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கவில்லை. இருந்தாலும்கூட உலகுக்கு நன்றாக சில விஷயங்கள் தெளியவைக்கப்

பட்டு, உலகம் தெரிந்து கொண்ட பிறகு, அவர் மேல் நடவடிக்கை எடுத்தால் எடுத்த நடவடிக்கை நியாயம் நிச்சயமாக மக்களுக்குத் தெரியும் என்ற காரணத்தால் பொறுத்திருக்கிறோம். கூடிய விரைவில் நடவடிக்கை எடுப் பதுபற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, இது போன்று உடனுக்குடன் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஒவ்வொரு அதிகாரியும் அரசாங்கத்தை மீறக்கூடிய செயல் ஏற்படும். அதிகாரிகளுக்கு பயம் இல்லாமல் போய் விடும். ஆகவே என்னைப் பொறுத்தவரை யாராக இருந்தாலும் அரசாங்க விதிகளைப் பின்பற்ற வேண்டும். கவர்ன்மெண்ட் கான்டக்ட் ரூல்ஸ்-படி நீங்கள் இனிமேல் அதிகாரிகளை நிர் வகிக்கப் போகிறீர்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன். இதில் அரசியல் தேவை கிடையாது அரசாங்க அதிகாரிக்கு. நாளைக்கு இன்னொரு அதிகாரி எனக்கு ஆலோச கராக வருவார்; அவர் ஆலோசனை சொல்வார்; அவர் பத்திரிகைக்கு பேட்டி கொடுப்பார். தாங்கிக் கொள்வீர் களா?

(ஆ) சென்னை திரிசூலத்திற்குப் பக்கத்தில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி அளிப்பது குறித்து.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவரவர் களே, என்னுடைய பூங்கா நகர் தொகுதி புளியந்தோப்பு பகுதியில் காந்தி நகரைச் சார்ந்த 40 பேர் ஒரு டெம்போ வேனிலே திண்டிவனத்திற்கு அருகேயுள்ள ஒரு ஊரில் தங்கள் உறவினர் ஒருவரின் மரண இறுதிச் சடங்கிலே கலந்து கொள் வதற்காகச் சென்றபொழுது, விமான நிலையத்திற்கு அருகில், திரிசூலத்திற்குப் பக்கத்திலே விபத்து ஏற்பட்டு ஆறு பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள். 31 பேர் சென்னை மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த விபத்திலே இறந்த ஆறு பேரும் கூலித் தொழிலாளிகள். இவர் களில் சிலர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சார்ந்தவர்கள். ஆனால் ஏழைத் தொழி லாளிகள், ஆதி திராவிட மக்கள். இவர்களை நம்பியே அந்தக் குடும்பங்கள் இருக்கின்றன, எனவே, கட்சி வேறுபாடு களுக்கு அப்பால் மனிதாபிமானத்தின் அடிப்படையில் கருணையே உருவான நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தக் குடும்பங்களுக்கு நிவாரண உதவி அளிக்க அன்புடன் வேண்டுகிறேன் தங்கள் மூலமாக.